மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதன் விவரம் என்னிடம் இப்போது இல்லை.

It was decided to computerize the load generation balance in the constituent States for each month of the Fifth Five Year Plan Tamil Nadu Electricity Board has spared the services of an Engineer to assist the Southern Regional Electricity Board in the studies.

புதிய சர்க்கரை ஆலைகள்

*532 வினா: திரு. மே. சி. தூயமணி; மாண்புமிகு தொழில் மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மேட்டுப்பாளையம் தொகுதி காரமடை பிளிச்சியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவும் ஆக்கப்பணி எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறுவ இருக்கும் சர்க்கரை தொழிற்சாலையை எந்த இடத்தில் நிறுவுவது என்பது இன்னும் அரசின் ஆய்வில்தான் உள்ளது. இதுபற்றி இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. கோவை செழியன் : பேரவை தலைவர் அவர்களே, ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்று சொன்னால் இந்த ஆலைக்கு இவ்வளவு கரும்பு நிரந்தரமாக வரவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் சோர்ஸ் ஆப் இரிகேஷன் இருக்க வேண்டும். எந்த சோர்ஸ் இல்லாமல் மழையை நம்பி இருக்க வேண்டுமென்று நிலை இருக்கிறது என்று கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஸ்டாடிஸ்டிகல் டிபார்ட்மெண்டில் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையில் இந்த மாதிரியான சாத்தியக் கூறு இல்லை, பெய்ல்யூர் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்களே.இந்தமாதிரி ஆலையை கொடுமுடியில் கொண்டுவர ஏற்பாடு செய்தால் நஷ்டம் ஏற்படும் என்று அரசாங்கம் அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கீழ்க்கண்ட காரணத்தால் கோயம்புத்தூர் பாலக்காடு சாலையிலிருந்து தெற்கில் 5 மைல் தொலைவில் உள்ள குனியமுத்தூர் கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டது. குனியமுத்தூரைச் சுற்றி 30 மைல் தொலைவில் கரும்பு சாகுபடி செய்யும் பரப்பளவு சுமார் 27,000 ஏக்கராவாக இருக்கும். ஆனால் இப்பரப்பு காரமடையைச் சுற்றி 19,000 ஏக்கராக இருக்கும். ஆகவே குனியமுத்தூருக்கு 50 சதவீதம் கரும்பு சாகுபடி பரப்பு அதிகமாக இருக்கும். பொள்ளாச்சி வட்டத்தில்

கரும்பு கிடைப்பதால் குனியமுத்தூரில் ஆலையை நிறுவுவதால் இரண்டு பருவங்களிலும், அதாவது சர்க்கரை ஆண்டு பருவத்திலும் சிறப்புப் பருவத்திலும் கரும்பு கிடைக்கும். ஆனால் காரமடையில் ஒரு பருவத்தில்தான், அதாவது ஜூலை செப்டம்பர் சிறப்புப் பருவத்தில்தான் கரும்பு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

கொடிமுடிப் பகுதியில் கொண்டு வர வேண்டுமென்றால் அதைப் பற்றி பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. வி. பழனிவேலு : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் பகுதியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றதா ? இது என்ன ஆயிற்று, எப்போது ஆரம்பிக்கப் பட உள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போட வேண்டும்.

* 533 வினா திரு. த. சோணையா : மாண்புமிகு தொழில் மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியத்தில் சர்க்கரை ஆலை ஒன்று புதிதாக அமைக்க திட்டம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (ஆ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை வட்டத்தில் புதிய சர்க்கரை ஆலையொன்று அமைக்கப்படவிருக்கிறது.

Central Staff College.

*624 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether the Government are aware of the proposal of the Central Government to start a Central Staff College for Training high level functionaries of Agricultural Universities during the Fifth Plan ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) வேளாண்மைக் கல்லூரி பற்றிய விவரங்கள் மாநில அரசிடம் இல்லை.